பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (3-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 7

# கடும் சமரின் பின் யாழ்.கோட்டைக்கு நேற்று காலை படை முன்னேறியது!

## ஒரு நாள் சண்டையில் 27 படையினர் சாவு

கொழும்பு, டிசம்பர் 3

பல முனைகளில் இருந்தும் யாழ்.நகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையணிகளுக்கும் நகரில் நிலை கொண்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் உக்கிரச் சமர் இடம்பெற்றது.

புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில்— பெருத்த எடுப்பில்—மண்டைதீவுப் பகுதியிலிருந்து பண்ணைப் பாலம் வழியாக முன்னேறிய அரச துருப்புக்கள் நேற்றுக் காலை 10.30 மணிக்கு யாழ். கோட்டைக்குள் நுழைந்ததாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது.

நகரின் மையப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படை அணிகளை ஆரியகுளம் — ஸ்ரீதர் தியேட்டர் பகுதி, அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகள் ஆகிய இடங்களில் விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். யுத்தம் குறித்து

## முரணான தகவல்களை வெளியிடும் ராணுவத்தினர்!

கொழும்பு, டிச 3

யாழ். யுத்த நிலை குறித்து இராணுவத் தரப்பில் வெளியிடப்படும் அறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரணானவையாக இருப்பதாக கொழும்புச் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

★ முன்னர் இரண்டாயிரம் புலிகள் யாழ்ப்பாணத்தில் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக இராணுவம் கூறியது. ஆனால் தற்போது இருநூறு அல்லது முன்னூறு புலிகள் மட்டுமே அங்கிருப்பதாக அறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியக் கொடுப்பனவு இனி செயலகத்தில் இல்லை

### திங்கள் முதல் வங்கிகளிலேயே!

சாவகச்சேரி, டிச. 3

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் செயற்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவு கருமபீடத்தில் இதுவரை தமது நவம்பர் மாத ஓய்வூதியம் பெறாதவர்களின் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமைக்குப் பின்னர் வங்கிகளிலேயே மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த கருமபீடத்தில் நேற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

இக்கருமபீடம் இனிச் செயற்படமாட்டாது என்றும் —

இதுவரை ஓய்வூதியம் பெறாதவர்களின் ஓய்வூதிய வவுச்சர்களும், அதற்குரிய காசோலைகளும் நாளை திங்கட்கிழமை வங்கிகளுக்கு அனுப்பப்படும் என்றும் —

செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

### வங்கிகளுக்கு இடையில்

## காசோலை அங்கீகரிக்கும் பணி புதனன்று மட்டும்!

சாவகச்சேரி, டிச. 3

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இயங்கும் வங்கிகளுக்கிடையிலான காசோலைகளை அங்கீகரிக்கும் பணி (Clearance) எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட விருக்கிறது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, கொமேர்ஷல் வங்கி ஆகியவற்றுக்கு இடையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரம் மீது புக்காரா குண்டு வீச்சு!

சாவகச்சேரி, டிச. 3

நேற்று முன்தினம் இரவு வேளை யாழ். நகரப் பகுதி மீது புக்காரா விமானங்கள் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரியவந்தது. (உ)

## மட்டக்களப்பு மீது அதிரடி நடத்த புலிகள் முஸ்தீபு!

கொழும்பு, டிச. 3

வடக்கில் இராணுவத்தினர் தாக்குதல் தொடுத்துள்ள இவ்வேளையில்—

விடுதலைப் புலிகள் பெரும் எண்ணிக்கையாக கிழக்கு மாகாணத்தின் தொப்பிக்கல பகுதிக்கு வந்துள்ளதாகவும்—

அங்கிருந்து மட்டக்களப்பு நகர் மீது அதிரடித் தாக்குதல் நடத்த ஆயத்தமாவதாகவும்— பாதுகாப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

**காயமுறும் சிப்பாய்களுக்கு இரத்ததானம் செய்யுங்கள்!**

## திருப்பணி உண்டியல் பணத்தை பாதுகாப்பு நிதிக்கு வழங்குங்கள்!!

### கத்தோலிக்கர்களிடம் மேற்றிராணியார் கோரிக்கை

கொழும்பு, டிச. 3

பாதுகாப்பு நிதிக்கு உதவுங்கள்! களத்தில் காயமடையும் சிப்பாய்களுக்கு இரத்த தானம் செய்ய முன்வாருங்கள்!!

— இவ்வாறான பகிரங்கக் கோரிக்கை ஒன்றை கத்தோலிக்க மக்களிடம் முன்வைத்துள்ளார் கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண. நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ

நடுநிலை வகிக்கவேண்டிய கத்தோலிக்க மதபீடத்தின் தலைவர் ஒருவர் இவ்வாறு யுத்தத்துக்கு ஆதரவாக — அரச படைகளை ஆதரித்து— பகிரங்க அறிக்கை விடுத்திருப்பது தமிழ் கத்தோலிக்க மக்களை அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றது.

கொழும்பு அதிமேற்றிராணியார் நேற்றுவெளியிட்ட தமது அறிக்கையில் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிம்மதியான வாழ்வு வாழ வன்னிக்கு செல்லுங்கள்!

### தமிழீழ மக்களுக்கு புலிகள் ஆலோசனை

சாவகச்சேரி, டிச. 3

''வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி மற்றும் வடமராட்சியில் தங்கி வாழும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். உணவு, சுகாதாரம், இருப்பிடம் என்று ஒரு மனிதனுக்கு தேவையான அடிப்படை வசதிகளைப்பெற பெரும் சிரமப்படுகின்றனர்.''

''அதேவேளை தொழிலை இழந்துள்ளதால் தமது வாழ்க்கையை ஓட்ட வழி எதுவும் இன்றி அவர்கள் திண்டாடுகிறார்கள்.''

''இந்த மக்கள் வன்னி செல்வதன் மூலம் இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு, ஏதாவது ஒரு சுயதொழிலை மேற்கொண்டு நிம்மதியான ஒரு வாழ்க்கையை மேற்கொள்ள முடியும்.''

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் மக்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியல் துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரை படைகள் அடைவது புலிகளின் பலத்தை அழித்ததாகாது

### இராணுவ விமர்சகர் கருத்து

கொழும்பு, டிச. 3

படையினர் யாழ்ப்பாண நகரை அடைவது என்பது விடுதலைப் புலிகளின் படை பலத்தை அழித்ததற்குச் சமனாகாது.

பிரபல பத்திரிகையாளரும், இராணுவ ஆய்வாளருமான டி. சிவராம் (தராக்கி) இவ்வாறு கூறியிருக்கிறார்.

யாழ். நகரை படையினர் கைப்பற்றி விட்டதாக கூறப்படுவது குறித்து பி.பி.ஸியின் தமிழோசைக்கு அவர் நேற்றிரவு கருத்து வெளியிட்டபோதே இப்படிக் கூறினார்.

யாழ். நகரையும், மண்டைதீவுப் பகுதியையும் இணைத்தால் ஒரு முக்கிய தளப் பகுதியை அமைக்கலாம் என்பது இராணுவத்தின் நீண்டகாலத் திட்டமாகும்.

தீவுப் பகுதிகளையும், யாழ். நகரத்தையும், பலாலித் தளத்தையும் இணைத்து விடுவது 'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது கூட படையினரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தணிகாசலம் இரத்தினசபாபதி

(ஊழியர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்)

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த தணிகாசலம் இரத்தினசபாபதி நேற்று முன்தினம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற – காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர் திரு. தணிகாசலம்-திருமதி இரத்தினம் ஆகியோரின் மகனும், திருமதி அரியமலரின் அன்புக் கணவரும், மகாதேவா (ஆய்வுகூடப் பரிசோதகர், இரத்தினபுரி அரசினர் வைத்தியசாலை), திருமதி சரோஜினிதேவி (ஆசிரியை, பரு. கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை) திருமதி இந்திராணி (ஆசிரியை, தம்பசிட்டி மெ. மி. பாடசாலை), சிவானந்தன் (ஆசிரியை, பரு வேலாயுதம் மகா வித்தியாலயம்), வாமதேவா (ஆய்வுகூடப் பரிசோதகர், அரசினர் சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தமலர் (மருந்தாளர், இரத்தினபுரி அரசினர் வைத்தியசாலை), மயூரகிரிநாதன் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போ, பருத்தித்துறை), சிவசுப்பிரமணியம் (சவுதி), தனலக்குமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் நேற்று மாலை பருத்தித்துறையில் நடைபெற்றன. இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவானந்தன்
(சகோதரன்)

ஆத்தியடி,
பருத்தித்துறை.

(சி/3122)

## மகாதேவி குணரத்தினம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கையும் தற்போது கனகம்புளியடிச் சந்தியையும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவி குணரத்தினம் நேற்றுக் காலமானார்.

இவர் குணரத்தினத்தின் அன்பு மனைவியும், குமரேசு – இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் தங்கரத்தினம் (தாவடி) அவர்களின் சிறிய தாயும், யசோதா, யவேந்திரன், அஜந்தா, சுஜாதா, அரவிந்தன், கஜந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகநாயகம் (வவுனியா), கருணாமூர்த்தி (ஜேர்மனி), கருணாநிதி (வலி தென்மேற்கு பிரதேச சபை), ஸ்ரீரஞ்சனிதேவி (ஜேர்மனி), சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி), சகுந்தலாதேவி (ஆசிரியை, இளவாலை சென் ஹென்றிஸ்) பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்போதைய இல்லத்தில் (3-12-95) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
கு. கருணாநிதி
(சகோதரன்)

தற்போதைய முகவரி:
நுணாவில் வீதி,
கனகம்புளியடி சந்தி,
மட்டுவில்.

(39448)

## திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம்

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம் அவர்கள் 2.12.95 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் சுகீலாதேவி (இந்தியா), இராஜகுலேந்திரன் (நோர்வே), விஜயசுந்தரம் (இ. போ. ச. வட்டாரக் கணக்காளர் காரியாலயம், கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவப்பிரகாசம் (இந்தியா), ஆனந்தராணி (நோர்வே), நீலேஸ்வரி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3.12.95 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு கீழே குறிப்பிட்ட தற்போதைய விலாசத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மட இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
ஆ. விஜயசுந்தரம்
(மகன்)

தற்போதைய முகவரி:
கந்தருடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(39443)

## லோப்பு தேவராசா (யாக்கோப்பு)

யாழ்ப்பாணம் பாஷையூர். 48A, கடற்கரை வீதியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சாவகச்சேரி கச்சாய்வீதியில் வசித்தவருமான லோப்பு தேவராசா (யாக்கோப்பு) 01-12-95 இல் காலமானார்.

இவர் அழகம்மாவின் அன்புக் கணவரும், றெஜீனா, றீற்றா, செபஸ்ரியாம்பிள்ளை (தொ. நு. உ. மாநகர சபை, யாழ்ப்பாணம்), வெஸ்மன், பபா, பேபி, தோபியாஸ், டெய்ஸ்மன் ஆகியோரின் அன்புத் தகப்பனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் அன்று மாலை (1-12-95) 4 மணியளவில் சாவகச்சேரி புனித விகோரியார் சேமக்காலையில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அழகம்மா
[மனைவி]

கச்சாய் வீதி,
சாவகச்சேரி

[39322]

## மாணவர்களுக்கு கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிச. 3

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் 10ஆம் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான — இன்றைய அவசர நிலைப்பாடுகள் தொடர்பான — கலந்துரையாடல் நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சகல மாணவர்களையும் அதில் கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## உடன் சந்திக்கவும்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின்

ஆசிரியர்கள் கார்த்திகை மாதச் சம்பளத்தை இன்று 03-12-95 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00 மணி தொடக்கம் 12 மணி வரை கீழ்காணும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

திரு. தா. அருளானந்தம்
வங்களா வீதி, மீசாலை.

[39444]

# சாவகச்சேரி பிரதேச சபை

## 1996 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் இறைச்சிக் கடைகள், சந்தைகள், கடைகள் என்பவற்றை 1996 ஜனவரி மாதம் தொடக்கம் 1996 டிசம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 18-12-95 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் 15-12-95 நண்பகல் 12-30 வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பதிரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை "விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தென்மராட்சி, பிரதேச செயலகம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இன்னதுக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலம் 18-12-95 ஆம் திகதி முற்பகல் 10 பணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையிலுள்ள கேள்விப் பெட்டியினுள் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும். கேள்விப் பத்திரங்கள் 18-12-95 ஆம் திகதி பி.ப. 2-00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள / குடும்ப அட்டை கொண்டு வருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெறத் தகுதியற்றவர் எனக் கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். கடந்த காலத்தில் குத்தகைப்பணம் செலுத்தத் தவறியவர்களுக்கு எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடத்த அனுமதிக்கப்படுவர். ஆள் மாறாட்டம் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு கொல்களக் கட்டணம் அப்போதைய காலப் பகுதிக்கு அமைவாக செலுத்தப்படல் வேண்டும்.

### 1996 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **கச்சாய் உப பணிமனை** | | | |
| 1. கொடிகாமம் பொதுச்சந்தை | 200255/- | 500/- | 250/- |
| 2. கொடிகாமம் சந்தை மாட்டு இறைச்சிக் கடை I | 45100/- | 200/- | 200/- |
| 3. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 3500/- | 100/- | 100/- |
| 4. கொடிகாமம் சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 4000/- | 100/- | 100/- |
| 5. மாட்டிறைச்சிக் கடை இல. II | 10000/- | 200/- | 200/- |
| 6. மாட்டிறைச்சிக் கடை இல. III | 10000/- | 200/- | 200/- |
| **மிருசுவில் உப பணிமனை** | | | |
| 1. மிருசுவில் பொதுச்சந்தை | 1000/- | 100/- | 100/- |
| 2. மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை | 10000/- | 200/- | 200/- |
| 3. எழுதுமட்டுவாள் பொதுச் சந்தை | 1000/- | 100/- | 100/- |
| 4. மிருசுவில் வடக்கு சந்தை | 1000/- | 100/- | 100/- |
| **வரணி உப பணிமனை** | | | |
| 1. வரணி பொதுச்சந்தை | 13500/- | 200/- | 200/- |
| 2. வரணி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 12250/- | 200/- | 200/- |
| **கைதடி உப பணிமனை** | | | |
| 1. கைதடி பொதுச் சந்தை | 2000/- | 100/- | 100/- |
| 2. கைதடி ஆட்டிறைச்சிக் கடை | 12000/- | 200/- | 200/- |
| 3. கைதடி மாட்டிறைச்சிக் கடை | 13500/- | 200/- | 200/- |
| **நாவற்குழி உப பணிமனை** | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 10000/- | 200/- | 200/- |

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமையலுவலகம்,
கமநல சேவை நிலையக் கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
30-11-95.

(சி-2903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீதோபதேசசாரம்

தர்மம் தழைக்கவும்
தகாதன நீங்கவும்
கர்மமும் ஆற்றிடக்
காண்டீடம் தூக்குவாய்
சர்மமாம் உடல்களே
சமரில் அழ்வன
மர்மமாம் ஜீவனை
மாய்த்திட யார் வல்லார்?

— கவிமாமணி

## துவக்கேந்து புலியாய்!

அறம்வெல்லல் வரலாற்றின் உண்மை — அதை
ஆழ்ந்தெண்ணு! நெஞ்சத்தின் அடியூறும் திண்ணம்.

பல்லாயி ரம்ஆண்டுக் காலம் — தமிழன்
படைகொண்டு பண்போடும் அரசாண்ட ஈழம்
தெல்லோடித் திரிகின்ற நாசம் — பட்டுத்
தேய்வதோ சற்றேனும் இல்லாமல் ரோசம்?

குயில்வாழ்ந்த கூட்டுக்குள் கோட்டான் — குந்திக்
கொடுமைகள் புரிந்திட்டால் எவன்சீற மாட்டான்.
மயில்வாழ்ந்த பூஞ்சோலை நரிகள் — கையில்
மண்ணாகப் பொறுப்போமோ? வா ஓட நரிகள்.

துவக்கேந்து புலியோடு புலியாய் — பகைவன்
துவண்டோடத் தமிழ்மானம் நிமிர்ந்தோங்கும்
மலையாய்!
தவக்கோலம் எதுஇன்று புரிவாய் — வேங்கை
தளராத போர்க்கோலம் தான்; சேர வருவாய்!

— ச. வே. பஞ்சாட்சரம்

# 40 நாள் சண்டைக்கு ரூ. 50 கோடி செலவு

கொழும்பு, டிச. 3

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றும் ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையில் போரின நாற்பது நாள்களுக்கான செலவு ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிகமானது என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

''சூரியப்பிரகாசம்'' நடவடிக்கை இன்றோடு 47ஆவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. இது முடிவடைய இன்னும் பல நாள்கள் செல்லும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன, (அ)

### மக்களின் கவனத்தை திசை திருப்பி

# தனது நெருக்கடிகளை மறைக்கவே நகரை கைப்பற்ற அரசு பிரயத்தனம்

கொழும்பு, டிச. 3

தேர்தல் காலத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனமை, தற்போது அரசு எதிர்நோக்கும் அரசியல் — பொருளாதார பிரச்சினைகள், நெருக்கடிகள் எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வு யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவதுதான்.

—இவ்வாறு அரச உயர் பீடம் கருதுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றி அதன் பின் பெரும் வெற்றிக் கொண்டாட்டம் ஒன்றை நடத்துவதன் மூலம் அரசு எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளை அமுக்கி விடலாம் என்றும்—

மக்களின் கவனத்தை இராணுவ வெற்றியின் பால் திருப்புவதன் மூலம் ஏனைய பிரச்சினைகளிலிருந்து அவர்களது கவனத்தைத் திருப்பி விடலாம் என்றும் —

இராணுவ வெற்றி மூலம் பல அரசியல் லாபங்களைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றும் —

அரசு கருதுகின்றது.

கடந்த வாரம் நாடாளுமன்ற புறக்கூடத்தில் ஏனைய அரச தரப்பு எம்.பிக்களுடன் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை உரையாடிக் கொண்டிருந்தபோது —

''இந்தப் போரின் வெற்றிக்காக எதனையும் செய்வதற்கு — எந்தப்பாரத்தையும் சுமப்பதற்கு — மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.'' — என்று மொனராகலை மாவட்ட எம்.பியான் ஜெகந் புஷ்ப குமார கூறினார்.

''ஆம். பாருங்கள் பாணின் விலை அதிகரிக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒருவரும் அது பற்றி முறைப்பாடு செய்யவில்லை'' — என்று பதிலளித்தார் அனுருத்த. (உ)

# யுத்தத்துக்கு எதிரானவர்கள் இன்று துரோகிகளாக கருதப்படும் நிலை

### யுக்திய ஆசிரியர் ஆதங்கம்

கொழும்பு, டிச. 3

யுத்தத்துக்கு எதிராகக் கதைப்பவர்கள் அனைவருமே இன்று துரோகிகளாகவும்' எதிரிகளாகவும் கருதப்படுகின்றனர். இதுவே தென்பகுதியில் இன்றுள்ள நிலைமை.

''யுக்திய'' பத்திரிகையின் ஆசிரியர் சுகந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இன்றோ, நாளையோ போரில் வெற்றி எட்டிவிடும்; யாழ். நகரில் சிங்கக்கொடி ஏற்றுவதுடன் இறுதி வெற்றி ஈட்டப்படும் என்று அரசின் தொடர்புசாதனங்கள் சாதாரண சிங்கள மக்களை நம்ப வைத்துள்ளன.

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையை விடுத்து யுத்தம் மூலமே தீர்வுகாணவேண்டும் என்று கருதும் சிங்களப் பேரினவாதக் கருத்துடைய பெரும்பான்மையோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளனர். அவர்களை அரச செய்தி ஊடகங்கள் ஊக்குவிக்கின்றன. அத்துடன் வெளிநாட்டு அமைப்புகளுக்கு எதிரான கருத்தும் மேலோங்கிவருகிறது.

தாம் செய்வதே சரி என்ற இத்தகைய அடிப்படைவாதத்தை இல்லாமற் செய்ய அரசு முயற்சிக்கவேண்டும்.

இல்லையேல் ஓர்நாள் அரசும் இந்த அடிப்படை வாதத்துக்குப் பலியாக நேரிடும்.

— இவ்வாறு யுக்திய ஆசிரியர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# யாழ். நகரை பிடிப்பதை "ரீ.வி"யில் காட்டுவோம்!

### அனுருத்த சொல்கிறார்

கொழும்பு, டிச. 3

''யாழ். நகரை அரசுத் துருப்புகள் கைப்பற்றும் போது அந்தவேளையிலேயே — அது நேரடியாக தொலைக் காட்சியில் நாட்டு மக்களுக்கு ஒளிபரப்பப்படும்.''

— இவ்வாறு கூறியிருக்கின்றார் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை.

கடந்த வாரம் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

''யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னதாகவே உங்களுக்கு (அரச தரப்புஎம்.பிக்களுக்கு) நான் முன்னறிவித்தல் தருவேன். அதனைப்பயன்படுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்து கொள்ளலாம்.''

''ஆனால் இந்தவெற்றியைப்பயன்படுத்தி யாராவது இனவாத பிரசாரத்தை நடத்த முற்பட்டால் — அல்லது இனவாததைக் கிளப்பினால் எனக்குத் தகவல் தாருங்கள். நான் அத்தகையோரைப் பிடித்து வருவதற்கு ஹெலிக்கொப்டர் அனுப்புகின்றேன். அவர்களை அங்கிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி சீருடைகளை அணிவித்து, ஆயுதங்களைக் கொடுத்து, யுத்த முனையில் கொண்டு போய் போர் புரியவிடுகிறேன்'' — இவ்வாறு அவர் அங்கு மேலும் கூறியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# சந்திரிகாவின் பின்னடிப்பு; தமிழ்க் கட்சிகள் அதிருப்தி

கொழும்பு, டிச. 3

ஜனாதிபதியை தாங்கள் கூட்டாகச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி பல தடவை கோரியும் அதற்குப் பதிலளிக்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருவது குறித்து கொழும்பில் உள்ள ஒன்பது தமிழ்க் கட்சிகள் அதிருப்தியும், வேதனையும், ஆச்சரியமும் வெளியிட்டுள்ளன..

தமிழ்க் கட்சிப் பிரதி நிதிகளைச் சந்தித்துப்பேசுவதற்கு முதலில் நேரம்ஒதுக்கிய ஜனாதிபதி பின்னர் அதனைக் காரணம் கூறாமல் — காலவரையறை குறிப்பிடாமல் — ஒத்திவைத்தது தெரிந்ததே.

அது முதல் — கடந்த பல வாரங்களாக — ஜனாதிபதியைச் சந்திக்க தமிழ்க் கட்சிகள் விடாது முயற்சித்து வருகின்றன. ஆனால் அவர்களின் முயற்சி பலனளிக்கவில்லை.

அதே சமயம் —

சந்திக்க முடியாது என்ற திட்டவட்டமான பதிலையும் ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கவில்லை. இதனால் இந்த விடயத்தில் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தமிழ்க்கட்சிகள் விழிப்பதாகக் கூறப்படுகின்றது. (உ)

# மூவரைப் பிடிக்க ரூ. 10 லட்சம் சன்மானம்

கொழும்பு, டிச. 3

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற காரணத்தால் தேடப்படும் மூவர் குறித்து தகவல் தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலீஸார் கொழும்பில் அறிவித்துள்ளனர்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த நடராசா பத்மினி என்ற பெண், யாழ். ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த மருதமுத்து சண்முகராஜா, தாவடி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை நவநித்தியவரன் ஆகியோரையே பொலீஸார் தேடுவதாக அறிவித்துள்ளனர். (ஐ-3)

# குதங்களை அமைக்க ரூ. 250 கோடி

கொழும்பு, டிச. 3

ஊறுகொடவத்தை, கொலன்னாவையில் தீக்கிரையாக்கப்பட்ட எண்ணெய்க் குதங்களை மீண்டும் அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்திவங்கி 250 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த எண்ணெய்க் குதங்களை மீள அமைப்பதற்கு இன்னும் ஒரு வருட காலம் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ-6]

# படையினருக்கு உதவ இந்திய ஹெலிகள்

கொழும்பு, டிச. 3

யாழ். குடாநாட்டில் தற்சமயம் நடைபெறும்யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவ இந்தியா ''குறொக்கடைல்'' ரக ஹெலிக்கொப்டர்களை வழங்க இணங்கியுள்ளது என்று 'லக்பிம' சிங்கள இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அதேநேரம் — அமெரிக்கா இதுவரை இலங்கைக்கு வழங்காத நவீன ஆயுதங்களை வழங்க இணங்கியுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டது.

யாழ். நகருக்குள் செல்ல இந்த ஆயுதங்கள் மிகவும் அவசியமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போரும் வாழ்வும்

ஒவ்வொரு உயிர் இனமும் வாழ்வதற்கு போர் அவசியமாகிறது. இதை நாம் இறைவனின் படைப்பிலும் காணலாம். எந்த உயிரும் வாழ்வதற்கு அதன் உடம்பு நல்ல நிலையில் இருக்கவேண்டும். உடலை நன்னிலையில் வைத்திருக்கவென உயிர்காக்கும் கிருமிகளும், உடலை அழிக்கும் கிருமிகளும் இடைவிடாது போர் செய்து கொண்டே இருக்கின்றன. உடல்காக்கும் கிருமிகள் வெற்றியடையும் வரை உயிர்வாழ்வு நடக்கும் அரிதாக அவை தோற்று அழிக்கும் கிருமிகள் வெற்றியடையும் பொழுது மரணம் சம்பவிக்கும். உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடும். இது விஞ்ஞானம்.

இன்னும் இறைவனின் படைப்பின் வெளிக்கள நிலையையும் ஆராய்வோம். காடுகளில் வாழும் உயிரினங்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. தங்கள் கூட்டத்துக்கு ஒரு தலைவனைத் தெரிவு செய்து தங்களைப் பாதுகாக்கின்றன.

மான் மரைக் கூட்டங்கள், யானை, எருமை இனங்கள் இந்த வகையிலேயே தங்களை எதிரியிடம் இருந்து பாதுகாத்துக் கொள்கின்றன.

எறும்புகள் தங்கள் கூட்டத்துக்கு ஏற்படும் ஆபத்தில் இருந்து தங்களைப் பாதுகாக்க ஒரு யுத்தக் குழுவை தங்கள் கூட்டில் வைத்துள்ளன. தேன் கூட்டிலும் கறையான் பாளியிலும் இவ்வித செயற்பாடு நடைபெறுவதை நாம் காணலாம்.

மனித சமுதாயத்தில் வெவ்வேறு இனக்கூட்டங்கள் காலம் காலமாக அரசையும் படைகளையும் கொண்டு தங்களைக் காத்து வருகின்றன. தற்போது நமது நாட்டில் நடைபெறுவதும் அவ்வித தற்காப்பு யுத்தமே. சிங்கள அரசு தங்கள் படைபலத்தைப் பயன்படுத்தித் தமிழர்களைக் கொன்றொழிக்க முயற்சிக்கிறது. அதிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் தற்காப்பு நடவடிக்கையே தமிழர்கள் நடத்தும் போர். ஒவ்வொரு தமிழனுக்குமான வாழ்க்கைக்கான போராட்டம் மட்டுமல்ல; உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்கான போருமாகும்.

இதன்படி எந்த நிகழ்வை எடுத்துப் பார்த்தாலும் ஒவ்வொரு உயிரும் உயிர் வாழ்வதற்கு போர் செய்து தான் வாழவேண்டி இருக்கிறது. இதுவே நியதியாகும். இதை எவராலும் மாற்றியமைக்க முடியாது.

அந்த வகையில் தமிழ் இனம் உயிர்வாழ்வதற்கு நடத்தப்படும் இந்தப் போரிலிருந்து எந்தத் தமிழனும் ஒதுங்கி நிற்கமுடியாது.

— பொன்னழகு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இடமாற்றம்

ஜெயா அழகு மாடம் சாவகச்சேரி பழைய நீதி மன்றக் கட்டடத்திற்கு முன்பாக (கோட்டடி) இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தகப் பெருமக்களுக்கும் அறியத் தருகின்றோம். (39317)

வேலணை சோதிடர் V.A. சிவராசா 152B அரசடி றோட் கந்தர்மடம் தற்போது செல்வி பல்பொருள் வாணிப நிலையம், விக்னேஸ்வரா மகா வித்தியாலய முன்பாக டச் றோட், மீசாலை மேற்கு, மீசாலை என்ற முகவரியில் சந்திக்கலாம். (39316)

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, திவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் கேரதீவு பாதையில் கோயிலாக்கண்டி (ஆசிரியர்) பத்மநாதன் இல்லத்தில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றது. டாக்டர் S. திருக்குமாரன் (39404)

### வியாழ மாற்றம்

6-12-95 ராகு, கேது வியாழன் மாற்றங்கள் ரூ.10/- எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் சதயா) வியாபாரிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளுமிடம் பரம் ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம், சாவகச்சேரி. (39438)

# சில வெளிநாடுகளின் உதவியுடன் படையினரின் பாரிய தாக்குதல்கள்

## ஜனவரியில் ஆரம்பமாகுமாம்

கொழும்பு, டிச. 3

பாதுகாப்புப் படைகள் வடக்கில் ஆரம்பித்துள்ள 'சூரியப் பிரகாசம்' ராணுவ நடவடிக்கை மூலம் யாழ். நகரைக் கைப்பற்றிய பின்னர், புலிகளின் ஏனைய முக்கிய கோட்டைகள் அமைந்துள்ள பிரதேசங்களைக் கைப்பற்றும் நீண்டகாலத் திட்டத்துடன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாம்.

இப்படி பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஜனவரி மாதத்தில் இந்த பாரிய தாக்குதல் ஆரம்பமாகும் என்றும் அந்த அதிகாரி கூறியதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கனடாவில் டக்ளஸ்-க்கு தீவிரபாதுகாப்பு

கொழும்பு, டிச. 3

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கனடா சென்றிருந்த போது அவருக்கு பலத்தபாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

டக்ளஸ் தேவானந்தா கனடாவில் இருந்த சமயம், ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் துப்பாக்கியோடு கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# முற்பணம் கட்டிய தமிழர்களுக்கும் ஹோட்டலில் தங்க அனுமதி மறுப்பு

கொழும்பு, டிச. 3

கனடாவில் இருந்து தமது திருமணத்துக்காக கொழும்பு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவருக்கு புதுமையான ஓர் அனுபவம் ஏற்பட்டது.

கனடாவிலிருந்து கொழும்பு வரும் முன்னரேயே கல்கிசையில் உள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் 5 நாள்கள் தங்குவதற்கு அவர் பணம் கட்டியிருந்தாராம்.

கொழும்பு வந்து திருமணத்தை முடித்துக் கொண்டு பிரஸ்தாப ஹோட்டலுக்கு இந்த இளைஞர் தமது மணப் பெண்ணுடன் வந்தபோது, ஹோட்டல் நிர்வாகி ஒருவர் "நீர் ஒரு தமிழன் எனவே ஐந்து நாள்கள் இங்கு தங்க முடியாது" என்று தெரிவித்தார்.

அன்றைய பொழுதை ஒருவாறு சமாளித்த அத்தம்பதியர் மறுநாள் அங்கிருந்து வெளியேறி தலைநகரில் உள்ள மற்றொரு உல்லாசப் பயணிகள் ஹோட்டலுக்குச் சென்றனர்.

அவர்கள் அங்கு தங்கியிருந்த சமயம் பொலிஸார் அந்த ஹோட்டலை சுற்றி வளைத்து அவரது பெயரைச் சொல்லி தேடுதல் நடத்தினராம்.

அந்த இளைஞர் தமது நிலையை விளக்கி தம்மிடமிருந்த ஆவணங்களையும் காட்டி தம்மை நிரூபித்ததை அடுத்து பொலிஸார் அங்கிருந்து அகன்று சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் சுப்பசொனிக் குண்டு வீச்சு!

மட்டக்களப்பு, — வாழைச்சேனை பகுதிகளுக்கு இடையேயுள்ள இச்ச தீவு காட்டுப் பகுதியில் கடந்த ஞாயிறன்று ஸ்ரீலங்கா விமானப் படையின் 'புக்காரா' விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தின.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

## தென்னம் தோட்டத்தில் ஷெல்கள்

தென்மராட்சி, டிச. 3

நேற்று முன்தினம் ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட இரு ஷெல்கள் கிளாலி தென்னம் தோட்டம் ஒன்றில் வீழ்ந்து வெடித்தன.

# பொலிஸ் வேட்டையில் சிக்கிய ரெலோ செயலர்

## தடுத்து வைக்கப்பட்டபின் விடுவிப்பு

கொழும்பு, டிச. 3

கொழும்பில் வகைதொகையின்றி தமிழர்களைக் கைது செய்து வரும் ஸ்ரீலங்காப் பொலிஸார் கடந்த வாரம் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் எம். சிவாஜிலிங்கத்தையும் கைது செய்து தடுத்து வைத்தனர்.

சந்தேகத்தின் பேரில் காலிமுகத்திடலில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு ஐந்து மணி நேரம் அவர் விசாரிக்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

"ஒரு பொலிஸ் அதிகாரி என்னை இனம் கண்டு அடையாளம் காட்டிய பின்னரும் அவர்கள் என்னைத் தடுத்து வைத்திருந்தது வஞ்சகமான செயல்"—என்று கூறினார் சிவாஜிலிங்கம்.

ஓர் ஒழுங்கு முறையின்றி— காரணம் ஏதுமின்றி — வழி தெருவில் செல்லும் தமிழர்கள் தலைநகரில் கைது செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில வாரங்களாக கொழும்பில் தமிழர் கைது செய்யப்படுவது அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)


## அறியத் தரவும்

ஞானவைரவர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சந்திராகுருங்லிகம் தற்போதய முகவரியை அறியத்தரவும்.

திருமதி T. சிவக்கொழுந்து
தேவகோட்டம்,
உடுப்பிட்டி

[39442]

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நவம்பர் மாதக் கொடுப்பனவு

மேற்படி கொடுப்பனவு சரசாலை வடக்கில் திரு. V.M. கெங்காதரன் வீட்டில்(5-12-95)செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வழங்கப்படும்.

அதிபர்

## முக்கிய அறிவித்தல்

வலி. கிழக்கு, வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலிக் கிராமிய வங்கி மூலமாக ஓய்வூதியம் (சிவில்) பெறுவோர் 4-12-95 ஆம் திகதி தொடக்கம் கனகம் புளியடிச்சந்தியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையில் முழுமையாகப் பணமாகப்பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறோம்.

முகாமையாளர்

(சி/3123)

## உடன் சந்திக்கவும்

3ஆம் மைல் போஸ்ட் ஆனைக்கோட்டையைச்சேர்ந்தவரும் ஓமானில் தொழில் பார்க்கும் திருநாவுக்கரசுவின் மனைவியுமாகிய கிளி என்பவர் கணவர் அனுப்பிய பொருள்களைப் பெற்றுக்கொள்ள மா. தியாகராசா (ராஜுவின் சகோதரர்) என்பவரை மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை(சாவகச்சேரி) சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வந்து சந்திக்கவும்.

தகவல்:
மா. ராஜு

(39320)

## அப்பாவைத் தேடும் மகள்...

அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. ஜெகநாதன் என்பவரை அவர் எங்கிருந்தாலும் தொடர்பு கொள்ளும்படி அவரது மகளான திருமதி ஐ. பாமதி வேண்டுகின்றார்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

நங்கூரம்
குருந்தட்டி,
மகாத்மா ஒழுங்கை,
நெல்லியடி, கரவெட்டி

(39440)

## தேடுகிறார்

மானிப்பாய், நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சாரதாதேவியை காணி விடயமாக பண்டத்தரிப்பைச் சேர்ந்த பிரான்சி அரியநேசன் தேடுகிறார்

தொடர்புகொள்ளவேண்டிய இடம்:-
மனோகரன் - யோகேஸ்வரி
சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

(39319)

## வலி. கிழக்கு வடபகுதி பல.நோ.கூ.சங்கம் அச்சுவேலி

எமது சங்கத்தின் அங்கத்தவர்களினதும், பாவனையாளர்களினதும் நன்மைகருதி கீழ்க்காணப்படும் இடங்களில் எமது கிளை நிலையங்களை நிறுவியுள்ளோம். எனவே வாடிக்கையாளர்கள் தமது பங்கீட்டுப் பொருள்களையும், மற்றும் நுகர்ச்சிப் பொருள்களையும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள எமது கிளைகளில் பெற்றுக்கொள்ளவும்.

| கிளைகள் | | கிளைகள் அமைந்துள்ள இடங்கள் |
|---|---|---|
| 1. டச்சுறோட் கிளை | (அச்சுவேலி) | டச்சு றோட், சாவகச்சேரி. |
| 2. நுணாவில் மேற்கு கிளை | " | மணங்குணாப்பிள்ளையார் கோவிலடி நுணாவில் மேற்கு. |
| 3. பெருங்குளம் சந்திக் கிளை | " | பெருங்குளம் சந்தி, பருத்தித்துறை வீதி. |
| 4. மட்டுவில் அம்மன் கோவிலடி | " | மட்டுவில் கண்ணகை ச.ச. நிலைய கட்டடம், மட்டுவில். |
| 5. மட்டுவில் சேச் லேன் கிளை | " | மட்டுவில் சேச் வீதி |
| 6. மீசாலை வடக்கு கிளை | " | மீசாலை வடக்கு, நகுலன் வீதி. |
| 7. இயற்றாலை கிளை | " | இயற்றாலை, வரணி. |
| 8. கைதடிச் சந்திக் கிளை | " | பிரதான வீதி, கைதடிச் சந்தி. |
| 9. நெல்லியடி அரசடிக் கிளை | " | சாமியன் அரசடிச்சந்தி, நெல்லியடி. |
| 10. நுணாவில் வேதக்கேணி கிளை | " | வேதக்கேணி கந்தசுவாமி கோவிலடி, நுணாவில். |
| 11. சரசாலை வடக்கு கிளை | " | சரசாலை வடக்கு. |
| 12. பருத்தித்துறை 1ம் கட்டையடி கிளை | " | பருத்தித்துறை கிராமக்கோட்டடி. |
| 13. கொடிகாமம் கிளை | " | கண்டி வீதி, கொடிகாமம். |
| 14. தச்சன்தோப்பு கோவிலாக் கண்டிக் கிளை | " | தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி. |
| 15. மொத்த நிலையம் டச்றோட் | " | சாவகச்சேரி டச்சுறோட். |
| 16. " " மட்டுவில் வில்சன் | " | மட்டுவில் வடக்கு, வில்சன் ச.ச.நி. கட்டடம். |

(சி/3244)

கூட்டுறவு சேவையிலுள்ள
பொது முகாமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அங்கும் இங்கும்

பதினெட்டு வயதுக்கும் இருபத்தைந்து வயதுக்கும் இடைப்பட்ட சிங்கள இளைஞர்களைக் கட்டாய இராணுவ சேவைக்கு அணிதிரட்ட வேண்டும்.

எட்டு அமைச்சர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட விசேட குழு அரசாங்கத்துக்கு இவ்வாறு சிபார்சு செய்திருக்கிறது.

போர் நடைபெறாத பகுதிகளின் பாதுகாப்பைப் பேணுவது சம்பந்தமாக ஆராய்வதற்காக இந்த அமைச்சர்கள் விசேட குழு உருவாக்கப்பட்டது.

விசேட குழுவின் அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போது, அமைச்சர் தொண்டமான் தவிர்ந்த ஏனையோர் வரவேற்றனர்.

எனவே அமைச்சர்கள் விசேட குழுவின் சிபார்சு விரைவில் உத்தரவாக உருவெடுத்து, சிங்கள இளைஞர்கள் லட்சக் கணக்கில் கட்டாய இராணுவ சேவைக்கு அணி திரட்டப்படுவார்கள்.

போர் நடக்காத இடங்களின் பாதுகாப்புக்கு லட்சக் கணக்கானோர் தேவைப்படுவரா?

போர் நடக்கும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள துருப்புகளை, ஏனைய இடங்களுக்கு அனுப்புவதைத் தவிர்ப்பதற்காகவே இந்தக் கட்டாய இராணுவ சேவை என்று கூறமுடியாது.

வடக்கு – கிழக்கில் போரிடுவதற்காக சிங்கள இளைஞர்கள் எல்லோருக்கும் இராணுவப் பயிற்சி அளித்து தயார் நிலையில் வைத்திருப்பதற்கான ஒரு திட்டமே இது!

தொழில் பார்க்கும் தொழிற் பயிற்சி பெறும் இளைஞர்கள் தவிர்ந்த ஏனைய 18 – 25 வயது சிங்கள இளைஞர்கள் சகலரையும் கட்டாய இராணுவ சேவைக்கு அழைப்பது, பயிற்சி அளிப்பது என்பது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான பெரும் எடுப்பிலான, திட்டமிட்ட சூழ்ச்சியே.

தமிழர்களுக்கு எதிராக, அவர்களைப் பூண்டோடு அழிக்கும் நோக்குடன் சிங்கள தேசம் முழுவதையும் அணி திரட்டும் ஏற்பாடுமாகும்.

சிங்களவர் என்றென்றும் தமிழர்களின் பகைவர்களே. அவர்கள் ஆட்பலம் மூலம் தமிழர்களை அழிக்க முற்படுகறார்கள் என்பதனையும் இந்த நடவடிக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழர்களை, தம்ழ் இளைஞர்களை இது விழிப்படையச் செய்யவேண்டும். நாம் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், எப்படி அவர்களை வெல்வது என்று எண்ணக் கூடாது.

வீரமும், விவேகமும் இருந்தால் எமது கையிலேயே வெற்றிக்கனி என்று மன நம்பிக்கை கொள்ள வேண்டும்.

சிங்கள இளைஞர் கட்டாய இராணுவ சேவைக்கு அணிதிரட்டப்பட்டால் எமது இளைஞர்கள் தாமாக ஆயுதப் பயிற்சி பெற முன்வர வேண்டும்.

இல்லையேல் ஈழத்தமிழினம் சிங்களவரிடம் பூரண சரணாகதி அடைந்து அடிமையாக வாழ நேரிடும்.

தன்மானம் இல்லாத தற்குறியா தமிழன்? இளைஞர்களே உங்கள் இரத்த நாளங்களைச் சுண்டிப் பாருங்கள்! விடை பிறக்கும்.

# இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

சாவகச்சேரி, டிச. 3

வலிகாமம் பகுதியில் ''சூரியக் கதிர்'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருடன் நேற்று இடம்பெற்ற சமரில் வீரச்சாவடைந்த நான்கு போராளிகளின் வித்துடல்கள் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணி வரை அவர்களது பெற்றோரின் வருகைக்காக தென்மராட்சி கோட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

பின்னர் வித்துடல்கள் மந்துவில் சிறிபாரதி மகா வித்தியாலயத்தில் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும். அதன் பின்னர் அங்கிருந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும்.

இந்த நான்கு போராளிகளினதும் விவரம் வருமாறு:

★ வீரவேங்கை அருச்சுணன் (கந்தையா கணபதி — செட்டிகுளம் வவுனியா — த. மு:- பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை சிவதாஸன் (துரைராஜா ஜெயகரன் — வேலணை கிழக்கு — த. மு:- திருநெல்வேலி)

★ வீரவேங்கை ரவிக்குமார் — (இளங்கோ இளங்குமரன் சித்தன்கேணி)

★ வீரவேங்கை பரமதேவா (இராசமாணிக்கம் பரமதேவா — களுதாவளை மட்டக்களப்பு)

★ ★ ★

நேற்றைய தினம் வலிகாமம் பகுதியில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அக்கினோவின் (மகேந்திரராசா நிசாந்தினி உடுப்பிட்டி) வித்துடல் இன்று வரமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

(ஐ)

# நிதித்துறை அறிவிப்பு

சாவகச்சேரி, டிச. 3

பின்வருவோரைத் தமது அடையாள ஆவணங்களுடன் சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை திங்கள் காலை 10 மணிக்கு வருகைதருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

★ கௌரி சண்முகநாதன் — பல்கலைக்கழக ஊழியர், யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி விநாயகமூர்த்தி — மே/பா. அன்னசோதி, செபஸ்தியர் கோவிலடி, அளவெட்டி தெற்கு.

★ வேலுப்பிள்ளை கனகசபை —முருகமூர்த்தி கோவில் வீதி, நவாலி தெற்கு.

★ சிவபாலன் கருணாதேவி — முருகமூர்த்தி கோவில் வீதி, நவாலி தெற்கு

★ வி.ரி.முருகேசு— ஆயிலி, காரைநகர்.

★ கனகசபை சிவஞானம் — முருகமூர்த்தி கோவில் வீதி, நவாலி தெற்கு.

★ சிவக்கொழுந்து சத்தியலிங்கம்— கோப்பாய் வடக்கு.

★ என். கனகநாயகம் — 537, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு.

★ செல்லப்பா வைத்தியநாதன்— கோண்டாவில்.

★ செல்லப்பா தங்கராசா — உரும்பராய்.

★ செல்லையா கணேஸ்— ஞானவீரசிங்கம் சமூக நிலையம், புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

★ தியாகராசா தயானந்தன் (ஆசிரியர்)— 'இலட்சுமி பவனம்', பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு.

★ கார்த்திகேசு கேதீஸ்வரநாதன்— மே/பா. ரகுநாதன், இல. 18, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு.

★ தாமோதரம்பிள்ளை வல்லிபுரம் அல்லது பத்மநாதன் மாலா—வங்கி ஒழுங்கை, புத்தூர் மேற்கு.

★ வினாயகமூர்த்தி அரியநாயகம் அல்லது அரியநாயகம் அகிலா— வடலியடைப்பு, சங்கானை மேற்கு

★ சண்முகலிங்கம் கௌரீஸ்வரி— செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

★ எஸ். காசிப்பிள்ளை (ஆசிரியர்)— கலைநகர், சித்தன்கேணி.

★ எம். அஞ்சலோ — இல. 20, சின்னக்கடை வீதி, குருநகர்.

★ பெரியதம்பி செல்வவிநாயகமூர்த்தி — கேசரி வீதி, தையிட்டி.

★ செல்லத்துரை அன்னம்மா— பத்திரகாளி கோவிலடி, தாவடி தெற்கு (ஐ)

## எழுத்தாளர் ஒன்றுகூடல்

சாவகச்சேரி, டிச. 3

எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடக கர்த்தாக்கள், கலை இலக்கியவாதிகள், சஞ்சிகையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இக் கலந்துரையாடலில்தவறாது பங்குபற்றுமாறு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவர் செங்கைஆழியான் அனைவரையும் கேட்டுள்ளார்

(அ)

## 'வெளிச்சம்' இன்று வரும்

சாவகச்சேரி, டிச. 3

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்', கலை,இலக்கிய சமூக இதழின் - கார்த்திகை மாத இதழ் இன்று வெளி வரவுள்ளது.

இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் வழங்கியமாவீரர் நாள் செய்தியுடன், வலிகாமம் மீது சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் நோக்கம் பற்றியும் வலிகாமத்திலிருந்து மக்கள் இடம் பெயர்ந்தமை பற்றியும் கலை, இலக்கியப் படைப்பாளிகளின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

(ஐ)

## குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார் கோவில் கேணியில் குளித்துக் கொண்டிருந்த இரு சகோதரர்களில் ஒருவர் நீரில் மூழ்கி பலியானார் மற்றவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியில் இருந்து இடம்பெயர்ந்து தும்பளையில் வசித்து வந்த தெய்வம் லஷ்மன் (வயது 14) என்பவரே உயிரிழந்தார். இவரது சகோதரரான தெய்வம் பிரதீப்குமார் (வயது 13) என்பவரே ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டார். (ஐ-15)

## குப்பையை எரித்தபோது ஷெல் வெடித்தது

தென்மராட்சி, டிச. 3

பனம் கொட்டுச்கு அருகில் வைத்து குப்பையை எரித்தபோது கொட்டுக்குள் கிடந்த ஷெல் வெடித்தது.

இந்த சம்பவம் பளைபேராலைப் பகுதியில் இடம் பெற்றது.

படையினரால் ஏவப்பட்ட ஷெல் பனம் கொட்டுக்குள் [illegible] இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஐ-11)

# கோடரிக் காம்புகள்!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கென ஸ்ரீலங்கா இராணுவம் தொடங்கிய ''றிவரச'' (சூரியப்பிரகாசம்) நடவடிக்கை இன்றுடன் நாற்பத்தேழாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது.

கார்த்திகை விளக்கீடு நாளான எதிர்வரும் புதன்கிழமை அரை ''செஞ்சரி'' வரப்போகிறது.

விடுதலைப் புலிகளை வெல்வதற்காக படையினர் தமது பாதைகளையும், உத்திகளையும் மாற்றி வருவதாக இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்கா பெருமைப்படுகிறார்.

ஆனால் புலிகள் இராணுவத்தை விஞ்சும் விதத்தில், செருக்களத்தில் புதிய உத்திகளையும், இராணுவத் தொழில் நுட்பங்களையும் கையாண்டு வருகின்றனர்.

அதனால்தான், யாழ்ப்பாண நகரின் புற எல்லைகளைத் தாண்டி, நகரின் உட்பகுதிக்குள் – மையப்பகுதிக்குள் நுழையும்போது படையினர் கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

*பிரசாரப் பிரமாதம்*

இது தெரிந்தே படையினர் மத்தகதியிலேயே தாம் முன்னேறி வருவதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் சிங்கள மக்களிடம் தமிழர்களுக்கு எதிரான விரோத உணர்வுகளைத் தூண்டி அரசுக்கு ஆதரவு தேடுவதற்காக போர்க் களத்தில் தங்களுக்கே முழு வெற்றி கிடைக்கப்போவதாகப் பிரசாரத்தினால் பிரமாதப்படுத்துகிறார்கள்.

இந்தப் பின்னணியில்—

அரசு விரும்பி இருந்தால் யாழ்ப்பாணத்தை 24 மணித்தியாலங்களுக்குள் கைப்பற்றி இருக்கலாம். ஆனால் யாழ்ப்பாண மக்களுக்கும் அவர்களது சொத்துக்களுக்கும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவே அவ்விதம் நடந்து கொள்ளவில்லை — என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த கூறியிருக்கிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழும் தொனியில்!

போர்முனைச் செய்திகளைத் தணிக்கை செய்து கொண்டு, வெளி நாட்டுச் செய்தியாளர்கள் உட்பட பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குத் தடை விதித்துக் கொண்டு, அனுருத்த இப்படிக் கூறுவது எளிதானது தான்.

இராணுவம் ஏவிய எறிகணைகளாலும், வீசிய குண்டுகளாலும் யாழ்ப்பாணம் சின்னாபின்னப் பட்டுள்ளது. அதன் முகம் சிதைக்கப்பட்டு விட்டது. கட்டடக் காடாகவும், ஆவி நகராகவும் யாழ்ப்பாணத்தை மாற்றிக் கொண்டு, அழித்துக் கொண்டு அனுருத்த மேற்சொன்னவாறு உலகத்தை ஏமாற்றுகிறார்.

மக்கள் முன்னேற்பாடாக வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளுக்கு வந்திருக்காவிடில் ஆயிரம் ஆயிரமாக உயிரிழப்பு உண்டாகி இருக்கும்.

யாழ்ப்பாண நகரத்தை அழித்து, மக்களைக் கொன்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது தான் அரசாங்கத்தின் உண்மையான நோக்கம்.

*தமிழ்க் கட்சிகள்*

இது கொழும்பில் இயங்கும் தமிழ்க் கட்சிகளுக்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை. மிகக் குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்பின் உள்நோக்கம் தெரியாமல் இருந்திருக்காது.

ஆனால் வழமைபோல, சங்கங்கள், கழகங்கள் செய்வது போல போரை நிறுத்துமாறு அறிக்கை விட்டதோடு கூட்டணி நின்றுவிட்டது. நாடாளுமன்றத்திலும் பேருக்கு ஒரு பேச்சு. அதற்கு மேல் அவர்களால் என்ன செய்ய முடியும்; அவர்களிடம் எதனை எதிர்பார்க்க முடியும் என்று சிலர் கேட்கலாம்.

சந்திரிகாவையே ஆட்டம் காணச் செய்யக்கூடிய ஐந்து நாடாளுமன்ற ஆசன பலத்தை வைத்துக்கொண்டு வெறும் அறிக்கையையும், பேச்சும் நடத்தி ஏமாற்றப் பார்க்கிறார்கள் கூட்டணியினர். இவர்களுக்கு யாழ்ப்பாணத்து மக்களிலும், யாழ்ப்பாணத்திலும் அக்கறை இருந்திருந்தால்'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த அடுத்த நாளே அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெற்றிருக்க வேண்டும். தமது பதவிகளை ராஜினாமாச் செய்து போராட்டத்துக்கு ஆதரவு நல்கி தம்மாலானதைச் செய்திருக்க வேண்டும்.

தமது பதவிகளை ராஜினாமாச் செய்ய விரும்பவில்லை என்றாலும் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம். அதனூடு தமிழர்களை அழிப்பதற்காகத்தான் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பு நடத்தப்படுகிறது என்பதனை உலகத்துக்காவது உணர்த்தி இருக்கலாம்.

*அர்த்தமற்ற நாடகம்*

அதை விடுத்து, போருக்கே அரைவாசி, நிதி ஒதுக்கீடு கொண்ட பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்து விட்டு—

பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான வாக்கெடுப்பில் மட்டும் கலந்துகொள்ளாமல்—

அர்த்தமற்ற நாடகத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியினர்.

இவர்களுக்கு தமிழ் மக்கள் மீதும், அவர்களின் நலன் மீதும் உள்ள அக்கறையை விட, தங்களின் சுய நலங்களிலும், சுகபோகத்திலுமே அக்கறை. இவர்களைத் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்வதே வெட்கக்கேடு.

ஈ. பி. டி. பி., புளொட் கட்சிகள் தாம்யுத்தத்தை நிறுத்துமாறு கேட்கவில்லை என்று வலியுறுத்திக் கூறி அறிக்கை வெளியிட்டன. எனவே அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பது எவருக்கும் புரியும்.

தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து, சிங்கள அரசாங்கத்தின் கூலிப்படைகளாக இருந்து அதன் மூலம் கிடைக்கும் அற்ப அதிகாரத்தை அனுபவிக்கும் ஆசையில் தாங்கள் தமிழர்கள் என்பதனையே மறந்து செயற்படுகிறார்கள்.

தமிழர் அரசியலில் எப்போதும் கோடரிக் காம்புகளுக்குக் குறைவில்லை. காலத்துக்குக் காலம் இவர்கள் தலையெடுப்பதே தமிழர்களின் ஒரு சாபக்கேடாகி விட்டது. தமிழர்கள் விடுதலை பெற்று நிம்மதியாக வாழ வேண்டுமெனில், கோடரிக் காம்புகள் உருவாகமல் தடுக்கப்பட வேண்டும். அது மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

சதுரங்கம் — சாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட கலைப்பீட மாணவி தவரூபியின் தந்தையார்

**சு. சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

3 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்

(39318)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## அன்னப்பிள்ளை நாகலிங்கம்

யாழ்ப்பாணம் இல. 49 இராசாவின் தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சாவகச்சேரி டச்சு வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அன்னப்பிள்ளை நாகலிங்கம்நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயரத்தினம் (பாப்பையா - செட்டித் தெரு வர்த்தகர்), குணசேகரம், அன்னலட்சுமி கணேசன், தனலட்சுமி சுப்பிரமணியம் தனேஸ்வரி பரமராசா, நகுலேஸ்வரி அமிர்தலிங்கம், பரமேஸ்வரி நவரத்தினம், பேரின்பநாயகி பற்குணசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கணேசன் ,மற்றும்வர்த்தகர் ந. சுப்பிரமணியம், காலஞ்சென்ற பரமராசா, மற்றும் அமிர்தலிங்கம், நவரத்தினம், பற்குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி பொன்னம்மா இராசையாவின் அன்புச் சகோதரியும் கதிரவேற்பிள்ளை, பஞ்சாட்சரம் (சின்னக் கடுக்கண்), பாலசுந்தரம், திருமதி தங்கமணி பழனிச்சாமி, சிவகங்கை முத்துலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாருமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி 351, டச்சு வீதியில் நடைபெற்று ஈமக் கிரியைகள் பி. ப. 2 மணிக்கு சாவகச்சேரி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
நா. ஜெயரத்தினம்
(பாப்பையா)
(மகன்)

39445

## தெய்வம் லக்ஷ்மன்

நல்லூர் ஆசிர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த தெ. லச்ஷ்மன் நேற்று (2-12-95) அகால மரணமாகி விட்டார்.

இவர் தெய்வம் -கிளி தம்பதிகளின் அன்பு மகனும், லக்ஷி, பிரதீபன், ஹர்ஜினி, கவி, சுபா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (3-12-95) பிற்பகல் 2. 00 மணிக்கு தும்பளை வீதி, பருத்தித்துறையில் உள்ள கி. இராசதுரை அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
வே. நவமோகன்
தும்பளை வீதி,
பருத்தித்துறை.
(39446)

## அருளம்பலம் சதாசிவம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பெரிய விளானை வசிப்பிடமாகவும், சாவகச்சேரி நுணாவில் கிழக்கு, றோம் வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சதாசிவம் நேற்று (2-12-95) காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், சிவபாலச்சந்திரன் (பொன்னுத்துரை). செல்வச்சந்திரன், அன்னக்கிளி ஆகியோரின் அருமைத் தந்தையாரும். காலஞ்சென்ற தர்மதுரை மற்றும் நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும், கந்தையா, காலஞ்சென்ற இலட்சம்மா மற்றும் இளையபிள்ளை, செல்லையா, நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், துரைராசா, புனிதவதி, சாந்திமதி ஆகியோரின் மாமனாரும், கோபிராஜ், தர்சிகா, கபில்ராஜ், துறாஜினி, குமரராசா, சர்வாசினி, வரதராஜினி, விமல்ராஜ், சதிஸ்ராஜ், சந்திரராஜ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மேற்படி நுணாவில் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை (3- 12 - 95) பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சீவபாலச்சந்திரன் (பொன்னுத்துரை)
(மகன்)

[394447]

# மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்

# நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 3

கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக திரு. க. குணராசாவும் —

கிளிநொச்சி செயலக உதவி அரசாங்க அதிபராக தற்போது யாழ். மாவட்டத்தின் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக இருக்கும் திருமதி கேதீஸ்வரனும் —

நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

யாழ். மாவட்டத்திலிருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்திருப்பதை அடுத்து, அவர்களுக்கான நிவாரணப் பணிகளைக் கவனிக்க வசதியாகவே இந்த நியமனங்கள் செய்யப்பட்டிருப்பதாக அப்பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ)

## கடும் சமரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று வழிமறித்து மோதினர்.

இதேவேளை—

மண்டைதீவுப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் கடும் சமருக்கு மத்தியில் — டாங்கிகள் சகிதம்— கோட்டையை நோக்கி முன்னேறினர்.

நகரை அண்டிய இந்த நான்கு முனைகளிலும் விடுதலைப் புலிகள் உக்கிரமாக படையினருடன் மோதியதாக களச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். நகரத்தின் வெளிப்புற எல்லைப் பகுதி வரை முன்னேறி இரு வாரங்கள் கடந்த பின்னரும், இன்னமும் யாழ். செயலகத்தையோ யாழ். ஆஸ்பத்திரியையோ படையினரால் எட்ட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருநாள் சண்டையில் மட்டும் ஓர் அதிகாரி மற்றும் 26 படையினர் உயிரிழந்ததாகவும்—

இருநூறு படையினர் வரை படுகாயமடைந்ததாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-3-6)

## திருப்பணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தோசம். அதற்கு திருச்சபை உதவும்.

சமாதானத்தை ஏற்படுத்துவது; அதற்காக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுவது — ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் முரணானவை. எனினும் கடந்த காலத்தில் இன மோதல்களின்போது இடம் பெற்ற சம்பவங்களைப் பார்க்கும்போது — தற்போதைய நிலைமைக்கு இணங்க — சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே இராணுவ நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

எனவே நாளை (இன்று) ஞாயிறு முதல் அடுத்த இரு வாரங்களுக்குள் சேகரிக்கப்படும் திருப்பணி உண்டியற் பணத்தை பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

எதிர்வரும் நத்தார் பண்டிகையின் போது அநாவசியச் செலவுகளைத் தவிர்த்து, அதன் மூலம் மீதமாகும் பணத்தை மோதல்களில் காயமடையும் படையினருக்கும் பாதுகாப்பு நிதிக்கும் செலுத்தும்படி வேண்டுகிறேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரில் தமிழீழக் கொடியை ஏற்றுவதற்கான நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என பாதுகாப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அச்செய்தியில் [illegible] ளது. (இ.3)

## நிம்மதியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது சிங்கள படைகளின் ஆட்லறிகளின் கவனம் சண்டை முனைகளிலேயே உள்ளது. சில நாட்களின் பின் இந்த ஆட்லறிகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது திரும்பி விட வாய்ப்பு உண்டு. இடம் பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்வதால் எதிரியின் எறிகணைகள் அதிக ஆபத்தை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தற்காலிகமாக வன்னி சென்று வாழ்வது பலவிதத்திலும் பொருத்தமான செயலாகும்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி செல்ல விரும்பும் மக்களுக்கு கிளாலியில் இருந்து இலவச பயணத்துக்கான வசதிகளை அரசியல் துறையினர் ஏற்கனவே செய்துள்ளனர்.

தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களுடன் அவர்கள் வன்னி செல்ல வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வன்னிக்கு சென்ற பின்னர், இருப்பிட வசதி, உணவு வசதி மற்றும் சுயதொழில் வாய்ப்பு வசதிகளை வெளிநாட்டு, உள்நாட்டு தொண்டர் நிறுவனங்கள் மூலமும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மூலமும் பெற்றுக் கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

வன்னியில் மருத்துவ வசதி குறைவு என்ற ஓர் அபிப்பிராயம் மக்கள் பலரிடம் உள்ளது. இது தவறானதாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து பல தனியார் மருந்தகங்கள் இப்போது வன்னி சென்று அங்கே தமது சேவைகளை ஆற்றத் தொடங்கியுள்ளன. அத்துடன் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் தேவையான மருந்துப் பொருள்களை வன்னியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பியுள்ளன. இதனால் வன்னியில் தேவையான அளவுக்கு மருந்துகள் இப்போது கையிருப்பில் உள்ளன.

எனவே, ஒப்பீட்டளவில் அதிக வசதிகளையும், தொழில் வாய்ப்புக்களையும் கொண்ட வன்னிக்குச் சென்று நிம்மதியான —பாதுகாப்பான — வாழ்க்கையை ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்கு— மேற்கொள்ளுமாறு தமிழீழ மக்களிடம் அரசியல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-3)

## யாழ். நகரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காக இருந்தது.

யாழ் நகரத்தையும் நகரத்தில் பிரதான பகுதியான யாழ். ஆஸ்பத்திரியையும் தமது கையில் வைத்துக் கொண்டு பலவற்றைச் செய்யலாம் என்று படையினர் திட்டமிடகூடும்.

காயமடையும் சிப்பாய்களை அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லும் நிலையை மாற்றி அவர்களை யாழ். நகரில் வைத்தே பராமரிப்பதே இதன் நோக்கமாகும்.

காயமடையும் படையினரை ஏற்றி இறக்க விமானங்களைப் பயன்படுத்துவதை இதன் மூலம் தவிர்க்கலாம் என படையினர் எண்ணியுள்ளனர்.

மண்டைதீவுடன் யாழ். நகரை தரைவழியாக நிரந்தரமாக இணைப்பது படையினருக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தலாம். அதன்மூலம் கிளாலி கடல் நீரேரியைக் கூட கட்டிப்பாட்டின் கீழ் கொண்டுவரலாம் என்ற எண்ணம் இராணுவத் தரப்பில் இருக்கலாம்.

அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் அது மேலும் பலத்த சண்டைகளுக்கு வழி வகுக்கும். — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-ஐ)

# மரக்கறி உச்சவிலை

சாவகச்சேரி, டிச. 3

தென்மராட்சிப் பகுதியில் மரக்கறி வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் சந்தைகளில் மரக்கறி வகை உச்சவிலைக்கு விற்பனையாகின்றது.

பயற்றங்காய் கிலோ 100 ரூபா முதல் 120 ரூபா வரையிலும்—

கத்தரிக்காய் கிலோ 200 ரூபா வரையிலும் உருளைக்கிழங்கு கிலோ 200ரூபா வரையிலும் விற்பனையாகின்றன.

ஒரு பிடி கீரை 20 ரூபா முதல் 25 ரூபா வரை விற்பனையாகிறது. இந்த உச்ச விலையில் பொதுமக்கள் பருப்பையே அதிகளவு உணவாக்கி வருகின்றனர். (இ-31)

## முரண்பாடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டிருக்கின்றது.

★ பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைப்படி நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சண்டையில் 27 படையினர் பலியாகியுள்ளனர்; 75 துருப்புகள் காயமடைந்துள்ளன. ஆனால் யுத்த முனையிலிருந்து நேற்றுக் கிடைத்த தகவல்களின்படி இருநூறுக்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

★ யாழ் நகர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாக நேற்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த இருவாரங்களாக இவ்வாறு தான் கூறப்பட்டு வருகின்றது.

★ 'ரோய்ட்டர்' செய்தியின்படி, யாழ். நகருக்குள் சிக்கியுள்ள விடுதலைப் புலிகளில் ஒரு பகுதியினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். முற்றுகையிடப்பட்டதாகக் கூறப்படும் யாழ் நகரிலிருந்து இவர்கள் எவ்வாறு வெளியேறினார்கள்? அவ்வாறாயின் படையினர் நகரை முற்றுகையிட்டுள்ளனர் என்று கூறுவது நகைப்புக்கிடமானதாகும்.

— இவ்வாறு இராணுவத் தகவல்களில் உள்ள முரண்பாடுகளை பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் சுட்டிக் காட்டியுள்ளார். [உ-6]

## காசோலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசோலைகளை அங்கீகரிக்கும் பணி கடந்த ஒரு மாதகாலமாக நடைபெறாமல் இருந்தது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் கடந்த வெள்ளியன்று நடந்த வங்கியாளர் கூட்டத்தில் காசோலைகளை அங்கீகரிக்கும் பணியை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது.

வங்கிகளுக்கிடையில் காசோலைகளை அங்கீகரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக சாவகச்சேரியில் மத்திய நிலையம் ஒன்று அமைப்பது என்றும் —

பிரதி புதன்கிழமைகளில் இந்தப் பணியை மேற்கொள்வது என்றும் — இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முன்னர் வங்கிகள் வழமையாக யாழ். நகரில் இயங்கிய போது நகரில் உள்ள பல்வேறு வங்கிகளின் கிளைகளுக்கு இடையில் காசோலைகளை அங்கீகரிக்கும் பணி ஒவ்வொரு வேலைநாட்களிலும் இடம் பெற்று வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது எடுக்கப்பட்டுள்ள புதிய தீர்மானத்தின்படி —

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வங்கிக்கிளையின் காசோலையை மற்றொரு வங்கியின் கிளையில் உள்ள ஓர் கணக்கில் வைப்பிலிட்டால், அந்தக் கணக்கிற்கு சம்பந்தப்பட்ட தொகையை வரவு வைப்பதற்கு ஆகக் குறைந்தது இரு வாரங்கள் செல்லும். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 3-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org